# தமிழ்ப் படைப்பாக்கத்துறை மாணவர்களின் விரிவான கற்றல் தளம்

- தமிழ்ப் படைப்பாக்கத்துறை மாணவர்கள் வகுப்பறைக் கற்றலைத் தாண்டி, பல்வேறு அனுபவ அடிப்படையிலான கற்றல் வாய்ப்புகளின் மூலம் தங்களது தமிழ் கற்றல் தளத்தை விரிவுபடுத்திக் கொள்கின்றனர்.

- கல்விச் சுற்றுலா: இலக்கியம், பண்பாடு, வரலாறு, கலை மற்றும் ஊடகம் சார்ந்த முக்கிய இடங்களுக்கு மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு, நேரடி அனுபவத்தின் வாயிலாகத் தங்களது அறிவையும் படைப்பாற்றலையும் விரிவுபடுத்திக் கொள்கின்றனர்.

- தொழில்துறை சார்ந்த கற்றல்: மாணவர்கள் வகுப்பறைக் கற்றலைத் தாண்டி, தினமலர், காலச்சுவடு, மிர்ச்சி FM, சன் டிவி உள்ளிட்ட முன்னணி ஊடகங்கள் மற்றும் பதிப்பக நிறுவனங்களில் நேரடி நிறுவனப் பயிற்சி பெற்று, படைப்பாக்கத் திறனையும் தொழில்முறை அனுபவத்தையும் ஒருங்கிணைத்துக் கொள்கின்றனர்.

- Professor in Residence - பேராசிரியர் உடனுறைப் பயிற்சி: பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சிறப்புமிக்க பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்களின் ஆழமான இலக்கிய அறிவையும் கற்பித்தல் அனுபவத்தையும் மாணவர்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர். இதன் மூலம் மாணவர்களின் சிந்தனைப் பரப்பும் இலக்கியப் பார்வையும் விரிவடைகின்றன.

- Practitioner in Residence - துறைசார் வல்லுநர் உடனுறைப் பயிற்சி: ஊடகம், எழுத்து, படைப்பாக்கம் உள்ளிட்ட துறைகளில் அனுபவம் பெற்ற வல்லுநர்கள் மாணவர்களுடன் நேரடியாகப் பயின்று, படைப்புச் சிந்தனையை நடைமுறை அனுபவத்துடன் இணைக்கின்றனர். இதன் மூலம் வகுப்பறைக் கல்வி, தொழில்துறைத் தேவைகளுடன் இணையும் கற்றல் சூழல் உருவாக்கப்படுகிறது.

இளங்கலை - தமிழ்ப் படைப்பாக்கம் கல்வியை மேலும் தொடர்பவர்கள் அரசு நடத்தும் போட்டித்தேர்வுகளுக்குத் தயாராகும் வாய்ப்புகளில் பயணிக்கலாம். அப்பயணம் இந்திய அரசின் குடிமைப்பணித்தேர்வு வரையிலான அறிமுகத்தையும் வழிகாட்டுதலையும் கொண்டதாக இருக்கும். புனைவிலக்கியம் அல்லாது அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களுக்குக் கட்டுரைகள், நிகழ்ச்சிதயாரிப்புகள், வர்ணனைகள், செய்திக்கட்டுரைகள் எழுதும் பயிற்சிகளுக்காகவும் உரிய தொழில் நிறுவனங்களோடும் புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் போடப்பட உள்ளன. பதிப்புத்துறையிலும் இதழாக்கத்துறையிலும் வலைப் பின்னல் வெளியிலும் செயல்படப் போதிய பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன.